THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 26th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Action against newspapers under the Defence of India Rules

* 333 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether action has been taken under the Defence of India Rules, against any newspaper or newsweekly; and

(*b*) if so, against what newspapers and for what reasons?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Action has been taken against the following papers under the Defence of India Rules :—

Malai Murasu—Daily.

Dina Thanthi—Daily.

Murasoli—Daily.

Malai Mani—Weekly.

Swadesamitran—Daily.

Tamil Nadu—Daily.

The matter is now *sub-judice*.

திரு. கே. ஏ. மதியழகன்: பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக அகில இந்திய பத்திரிகைக் குழுவை ஆசொசனை கேட்டதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்கிற மரபு டில்லியில் ஏற்பட்டிருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் பத்திரிகை ஆலோசனைக் குழுவை இந்த சர்க்கார் கலந்து ஆசோசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: டில்லியில் இருக்கும் மரபைப் பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை.

திரு. செ. மாதவன் : இந்தப் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப் படுகின்றபோது அதை உருவாக்கிய மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முன் பிரஸ் கவுன்சிலை ஆலோசனை கேட்பதாக ஒரு 'அண்டர்டேகிங்' கொடுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா

[26th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி எனக்குத் தெரியாது.

திரு. சா. கணேசன்: இந்தப் பத்திரிகைகள் மீது என்ன காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது கோர்ட் விசாரணையில் இருப்பதினால் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிகைகள் மீது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தது, மாநில அரசாங்கமே எடுத்ததா அல்லது மத்திய அரசாங்கத்தின் சிபார்சின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது மாநில அரசாங்கத்தைப் பொறுத்தது.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தி எதிர்ப்பு துவங்கிய பிறகு பத்திரிகை சம்பந்தமாகத் தணிக்கை முறை ஏற்பட்டிருக்கிறதா? அத்துடன் துப்பாக்கிச் சூடு சம்பவங்களைப் பற்றியெல்லாம் எப்படிப் போடவேண்டும் என்பதைப்பற்றி அதிகாரிகள் பத்திரிகை ஆசிரியர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் ஏதாவது கூறியதுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தணிக்கை முறை ஒன்றும் ஏற்படவில்லை.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பத்திரிகை உரிமைகள் பாதிக்கப்படும் வண்ணம் செய்திகளைப் பிரசுரிக்காமல் தடுப்பதற்கு இந்தப் பாதுகாப்பு விதிகள் பயன்படுத்தப்படுகின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உரிமைக்கு வரம்பு உண்டு. அதை எல்லாம் நன்றாக உணர்ந்துதான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல பத்திரிகைகள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப்பற்றி எழுதியிருந்தபோதிலும், சில பத்திரிகைகள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்ததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பற்றி எழுதியதால் அல்ல; ஆட்சேபகரமான விஷயங்களைப் போட்டதால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. அதை அவ்வப்போது பரிசீலனை செய்து, சட்ட நிபுணர்களைக் கொண்டு ஆலோசனை செய்து, அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து: அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டனவா? அப்படியானால் எந்தெந்தப் பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டன?

26th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: பலாத்காரத்தை மிகப் பெரிய அளவிலே செய்யவேண்டுமென்று செய்தியை வெளியிட்ட பெரியார் ராமசாமியின் 'விடுதலை' பத்திரிகை மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Arrears of Sales Tax and Entertainment Tax

* 334 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the arrears of sales tax, entertainment tax, due as on 30th September 1964?

THE HON. SRI R. VENKATARAMAN : The particulars regarding the arrears of tax under the Madras General Sales Tax Act, 1959, Central Sales Tax Act, 1956, Madras Sales of Motor Spirit Taxation Act, 1939, Madras Entertainments Tax Act, 1939 and Madras Local Authorities Finance Act, 1961 are furnished in the statement [a] placed on the Tabe of the House.

SRI C. CHIRANJEEVULU NAIDU : There are arrears of Entertainment Tax. Generally the tax is collected in advance by stamping the tickets. Then what is the cause for the arrears?

THE HON. SRI R. VENKATARAMAN : That is why the arrears are very low; it is only 6 lakhs and odd rupees.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமாஷா வரி பாக்கியை சர்க்கார் தள்ளிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தினால், அதைக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் அதைப்பற்றி இந்த அமைச்சரவை என்ன சொல்லி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தமாதிரி நினைப்பதற்கு இடம் இல்லை. 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அரியர்ஸ் இருக்கிறது. அது பத்து, பதினைந்து வருஷங்களாக உள்ள அரியர்ஸ் என்று சொல்லலாம். இதைச் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆகையால் இந்த மாதிரி எண்ணத்திற்கு இடம் இருப்பதாகப் புள்ளி விவரம் காட்டவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : விற்பனை வரியிலே ஏறக்குறைய 3½ கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. அதை ஒழுங்காகச் செலுத்துவதற்கு டாக்சிலே ரிபேட் கொடுத்தால் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒழுங்காகக் கொடுத்தால் விற்பனை வரி மட்டும்தான் வாங்குகிறோம். கால தாமதம் செய்தால் பெனல்டியுடன் வாங்குகிறோம். ஆகையால் ஒழுங்காகக் கொடுத்தால் பெனல்டி கிடையாது விற்பனை வரி மாத்திரம் செலுத்தவேண்டும். இதுவே ஒரு சலுகை என்று நினைக்கிறேன்.

---

a Printed as Appendix on page 221.